செ.வெ.எண். 73/பிப்ரவரி தேதி : 28.02.2017

**தருமபுரி மாவட்டம்**

**தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், இருளப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 318 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 16 இலட்சத்து 56 ஆயிரம் 150/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**





தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், இருளப்பட்டி கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் மாவட்ட ஆட்சியர் திரு கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.02.2017) நடைபெற்றது.

இம்மக்கள் தொடர்பு திட்ட முகாமில் வருவாய் துறையின் மூலம் ரூ. 5 இலட்சத்து 98 ஆயிரத்து 900/- மதிப்பில் புதிய குடும்ப அட்டை 113 பயனாளிகளுக்கும், ரூ. 44 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் இலவச வீட்டுமனைப்பட்டா 90 பயனாளிகளுக்கும், சமூக பாதுகாப்புத் திட்ட உதவித் தொகைகள் ரூ. 56 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் 47 பயனாளிகளுக்கும், பழங்குடியினர் சாதிச் சான்று 29 பயனாளிகளுக்கும், இணைய வழி பட்டா மாறுதல் 10 பயனாளிகளுக்கும், கிராம நத்தம் பட்டா மாறுதல் 5 பயனாளிகளுக்கும், தனி பட்டா 3 பயனாளிகளுக்கும், முதியோர் உதவித்தொகை 1 பயனாளிகளுக்கும் சிறு விவசாயி சான்று 5 பயனாளிகளுக்கும், அரசு தனியார் பணியில் இல்லை சான்று 2 பயனாளிகளுக்கும், வாரிசு சான்று 2 பயனாளிகளுக்கும், வேளாண்மைத்துறையின் சார்பில் ரூ. 6 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் டிராக்டர் 1 பயனாளிக்கும், ரூ. 94 ஆயிரம் மதிப்பில் ரோடேடர் 1 பயனாளிக்கும், ஓபிசி சான்று 1 பயனாளிக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் ரூ. 50 ஆயிரம் மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டா 2 பயனாளிகளுக்கும், ரூ. 23 ஆயிரத்து 250/- மதிப்பில் சலவைப்பெட்டி 5 பயனாளிகளுக்கும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் ரூ. 50 ஆயிரம் மதிப்பில் சொட்டுநீர் பாசன உபகரணம் 1 பயனாளிக்கும், ரூ. 80 ஆயிரம் மதிப்பில் சொட்டுநீர் பாசன உபகரணம் 1 பயனாளிக்கும் என மொத்தம் 318 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 16 இலட்சத்து 56 ஆயிரத்து 150/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஒருங்கே இணைந்து மாதந்தோறும் கிராமங்களைத் தேர்வு செய்து மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெற்று வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் முன்மாதிரி கிராமமாக 10 கிராமங்களை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அதில் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், இருளப்பட்டி கிராமம் ஒன்றாகும். இக்கிராமத்தில் பல்வேறு துறையின் மூலமாக முன்னுரிமை அடிப்படையில் நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறோம். மேலும் இம்முகாம்களில் வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை வேளாண்மை பொறியியல் துறை, மருத்துவ சுகாதாரத்துறை, புதுவாழ்வுத் திட்டம் என அரசின் பல துறைகளின் சார்பில் திட்டங்கள் குறித்த பதாகைகளை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்ததை பொதுமக்கள் பார்வையிட்டு தங்களுக்கு தேவையான வசதிகளை கேட்டறிந்தனார்கள்.

மேலும் இப்பகுதி விவசாயிகள் தோட்டக்கலைத்துறையின் சார்பில் சொட்டுநீர் பாசனத்திற்கான விண்ணப்பித்தினை இத்துறையின் மூலம் பெற்று விண்ணப்பித்து இச்சலுகையை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனென்றால் தற்போது தமிழகத்தில் எங்கும்

வறட்சி நிலவி வருகிறது. சொட்டுநீர் பாசனம் பயன்படுத்திக் கொண்டால் குறைந்த தண்ணீரில் அதிக விவசாய பயிர்களை செய்து அதிக அளவில் விவசாய பயன்பாட்டினை பெறலாம். நமது மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறையில் தற்போது நிதி இருப்பு உள்ளது. எனவே இப்பகுதியில் வசிக்கும் விவசாய பெருமக்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் அரசு மானியத்துடன் சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்த முன்வர வேண்டும்.

மேலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டம், உழவர் பாதுகாப்பு திட்டம் மற்றும் தொழிலாளர் நலத்துறையில் உறுப்பினராக சேர்ந்துக் கொண்டால் விபத்துக் காலத்தில் ரூ. 1 இலட்சத்திற்கான காசோலையும், விபத்தில் ஊனமுற்றால் ரூ. 10 ஆயிரம் வழங்கப்படுகிறது. மேலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் ரூ. 4 இலட்சமும் இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் அறுவை சிகிச்சைக்காக தமிழக அரசு வழங்குகிறது. மருத்துவ சிகிச்சைக்குறித்து ஏதேனும் சந்தேகங்களுக்கு 24 மணி நேரமும் இயங்கக்கூடிய கட்டணமில்லா தொலைபேசி எண். 104 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு பொதுமக்கள் மருத்துவங்கள் குறித்த சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ளலாம். தாட்கோ திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு 25 சதவீதமும் மற்றும் பழங்குடியினர்களுக்கு 35 சதவீதமும் விவசாயிகளுக்கு வேளாண் உபகரணங்கள் மானியம் வழங்குகிறது. படித்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் முனைவோர் கடன் ரூ. 10 இலட்சத்திற்குள் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் தனிநபர் கழிப்பறை அமைக்க அரசு ரூ. 12 ஆயிரம் மானியம் வழங்குகிறது. அதனை பெற்று தனிநபர் கழிப்பறை அமைக்க பொதுமக்கள் முன்வர வேண்டும்.

மேலும் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான ஜாதி சான்று, வருமானம் சான்று, இருப்பிடச்சான்றிதழ் பெற அந்தந்த பகுதிகளில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலகங்களிலும் விண்ணப்பித்துக்கொள்ளலாம் எனவும், பொதுமக்களுக்கு ஏதேனும் விவரங்கள் அறிய வேண்டுமெனில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கி வரும் 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 ஆகிய எண்களின் மூலமாக பொதுமக்கள் தங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மற்றும் புகார்களையும் கூறலாம். மேலும் அம்மா கைபேசி எண். 1100 எண்ணின் மூலமாக தங்களது குறைகளையும் மற்றும் கோரிக்கைகளையும் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக செய்தி மக்கள்தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனைகள், திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

இம்முகாமில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. பழனியப்பன், தனித்துணையாட்சியர் (ச.பா.தி) திரு. குப்புசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் திரு. அமீர்பாஷா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நல அலுவலர் திருமதி. இலாஹிஜான், தோட்டக்கலை துணை இயக்குநர் திரு. அண்ணாமலை, தாட்கோ மேலாளர் திரு. வைத்தியநாதன், வட்டாட்சியர் திரு. மணி உட்பட துறை ரீதியான அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.